புதுச்சேரி மாநில
தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ்
சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com
ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 81 | 26-09-2026 | சனி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volum 02 | Issue: 81 | 26-09-2026 | Saturday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## இளைஞர்கள் தான் Viksit Bharat-ன் முதுகெலும்பு : பிரதமர் மோடி பேச்சு



டெல்லி: செப்.26–

பிரதமர் நரேந்திர மோடி வத்நகரிலிருந்து வாரணாசி வரை இருசக்கர வாகனப் பயணம் மேற்கொள்ளும் சேவா யாத்ரிகர்களுடன் காணொளி வாயிலாக பேசினார். அவர்களிடம் பேசிய பிரதமர் மோடி அவர்களின் சேவை மனப்பான்மையை பாராட்டினார்.

பொதுவாக .திட்டங்கள் உருவாக்கப்படும் போது, அவை பெரும் பாலும் ஒரு வழக்கமான அரசுநடவடிக்கையாகவோ அல்லது அரசியல் வாதிகளாகிய நாங்கள் வெறும் பேச்சுக்காகக் குறிப்பிடும் விஷயமாகவோ தோன்றலாம். ஆனால், ஒரு திட்டம் உண்மையில் ஒருவரின் வாழ்க்கையை மாற்றி அமைத்து, அவர்களுக்கு ஒரு புதிய தொடக்கத்தை அளிக்கும் போது கிடைக்கும் அளப்பரிய மனநிறைவை நீங்கள் நிச்சயம் உணர்ந்திருப்பீர்கள்.

அரசுத் திட்டங்கள் என்பவை வெறும்நிதியைச் செலவிடுவது அல்லது அரசியல்ஆதாயம்தேடுவது மட்டுமல்ல; ஒரு திட்டம் சமூகத்தின் கடைக்கோடியில் உள்ள நபரையும் சென்றடையும்போது, அது அவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையின் தொடக்கமாக அமைகிறது; அதிலிருந்து கிடைக்கும் மனநிறைவு உண்மையிலேயே அசாத்தியமானது எண்டு குறிப்பிட்டார்.

நாம் சுயநலமற்ற சேவை மனப்பான்மையுடன் செயல்படும் போதுதான், 'ஆயுஷ்மான் யோஜனா' போன்ற திட்டங்கள் உருவாகின்றன. இந்த இரு நகரங்களுக்கு இடையே பயணம் செய்யும்போது, இத்தகைய சேவைப் பணிகளை நாங்கள் எவ்வாறு ஊக்குவித்துள்ளோம் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்று குறிப்பிட்டார். அரசியல், தேர்தல் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றிற்குத் தனித்தனி இடங்கள் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக தேசத்தை சிறப்பான முறையில் கட்டமைப்பதே மிக முக்கியமான நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் பிரதமர் மோடி மேலும் கூறினார். அந்த வகையில் நாட்டை உருவாக்க உழைக்கும் மக்கள் நாம். 'விக்சித் பாரத்'தை (வளர்ச்சியடைந்த இந்தியாவை) உருவாக்கும் உறுதியுடன் நாம் தொடர்ந்து முன்னேறிச் செல்வோம். இளைஞர்கள் தான் "விக்சித் பாரதத்தின்" (வளர்ச்சியடைந்த இந்தியா) முதுகெலும்பு என்றும், 2047க்குள் வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதில் அவர்களே முக்கிய உந்துசக்தி என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

## ஜெம் வீரமணி வழக்கை மூடி மறைத்தது திமுக

## மதுராந்தகத்தில் முதல்வர் விஜய் பேச்சு



மதுராந்தகம்: செப்.26–

"தமிழகத்தில் இளம்பெண்களை, பச்சைப் பிள்ளைகளை ஒருவன் இத்தனை ஆண்டுகளாக சீரழித்துக்கொண்டு இருந்துள்ளான். அந்த வழக்கை திமுக ஆட்சியில் மூடி மறைத்துள்ளார்கள். இதுபற்றி தமிழகமே கேள்வி கேட்கிறது, வாயைத் திறங்கள் ஸ்டாலின் சார்" என ஜெம் வீரமணி விவகாரத்தை குறிப்பிட்டு முதல்வர் விஜய் கேள்வி எழுப்பியுள்ளார்.

மதுராந்தகம் சட்டப்பேரவை இடைத் தேர்தலில் தவெக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து, தொழுப்பேடு பகுதியில் நடக்கும் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்று பேசிய முதல்வர் விஜய், " நான் இங்கு முதல்வராக வரவில்லை. இடைத்தேர்தலுக்காக ஓட்டுக் கேட்டு உங்கள் வீட்டு பிள்ளையாக வந்துள்ளேன். ஏன் உங்கள் விஜய் ஆட்சிக்கு வரக் கூடாதா? தவெக ஆட்சிக்கு வரக் கூடாதா? பிறகு ஏன் இந்த தீயசக்தி திமுக நம்மை பார்த்து தினம் தினம் ஆபாசமாக பேசுகிறது.

நாட்டில் இப்போது ஒரே ஆபாசநதியாக ஓடிக் கொண்டிருக்கிறது. நான் வெற்றி பெற்றதற்கு மக்கள் தான் காரணம். அன்று ஜெயலலிதாவை ஸ்டாலின் அவதூறாக பேசினார். இப்போது அவரது குடும்பத்தில் உள்ளவர்கள் இப்படி பேசுகிறார்கள். அவ்வாறு பேசும் திமுகவுக்கு அதிமுக மறைமுகமாக ஆதரவளிக்கிறது.

ஜெயலலிதாவை அவமதித்த திமுகவுடன் கூட்டணி வைக்க முடிவு செய்தபோதே அதிமுகவின் முகமூடி கிழிந்துவிட்டது. மதுராந்தகத்தில் என் தங்கைக்கு விசில் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். விசிலுக்கு வாக்களிப்பது என்பது பெண்களை அசிங்கமாக, ஆபாசமாக பேசுவோருக்கு கொடுக்கும் மிகப்பெரிய தண்டனையாக இருக்கும். திமுகவுக்கோ, அதிமுகவுக்கோ வாக்களித்தால் அது பெண்களை ஆபாசமாக பேசுவதை ஆதரிப்பதாக மாறிவிடும். நம் வீட்டு பெண்களை இவ்வாறு பேசுபவர்களை சும்மா விடக்கூடாது.

108 இடங்களில் வென்ற நாம் ஆட்சியமைக்க கூடாது என திமுக, அதிமுகவும் ஒரு கூத்து நடத்தினார்கள். அதிமுக பாஜகவின் ஒரு பிரிவு, ஆனால் இப்போது அதிமுக திமுகவின் கிளைக்கழகமாக மாறிவிட்டது. மக்கள் காசை கொள்ளை அடித்தவர்கள் ஆட்சிக்கு வரலாம், சாமானியர்கள் ஆட்சிக்கு வரக்கூடாது என அவர்கள் நினைக்கிறார்கள்.

விஜய் ஆட்சிக்கு வந்துவிட்டால் ஊழல் செய்யமுடியாது, கொள்ளை அடிக்க முடியாது என திமுகவும், அதிமுகவும் திட்டம் போட்டார்கள். இதனையே ஐயுஎம்எல் சட்டப்பேரவையில் சொன்னார்கள். எனவேதான் திமுக செய்த ஊழல்களை சட்டப்பேரவையில் சொன்னேன். சட்டப்பேரவையில் ஊழல் என சொல்லிவிட்டால், திமுகவினர் ஆதாரத்தை காட்டச் சொல்வார்கள். ஆதாரம் காட்டினால், அது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை என்பார்கள். நீதிமன்றத்தில் உள்ளதை பேசக்கூடாது என்பார்கள். நான் பேச்சை ஆரம்பிக்கும் போது கூட்டமாக சத்தம் போடுவார்கள். அவர்களின் நோக்கம் என்னை பேசவிடக்கூடாது என்பதிலேயே இருந்தது. அதனால் தான் நான் சத்தமாக பேச வேண்டியுள்ளது.

ஊழல் செய்த கூட்டத்தை விடவே மாட்டோம் என திமுகவுக்கும், ஸ்டாலினுக்கும் சொல்லிக்கொள்கிறேன். இதுவரை ஊழலே செய்ததில்லை என திமுகவால் சொல்ல முடியுமா? இனிமேல் ஊழலே செய்யமாட்டேன் என திமுகவால் சொல்ல முடியுமா? எப்படி பார்த்தாலும் இரண்டே பேருக்கும் இடையேதான் போட்டி. தீய சக்தி திமுகவுக்கும், தூயசக்தி தவெகவுக்கும் இடையேதான் போட்டி. எனது கேள்வி எப்போதும் ஸ்டாலினுக்குதான்.

நான் ஒரு பாலத்தில் ஆய்வு செய்ய சென்றால், அது நாங்கள் கட்டியது என திமுக சொல்கிறது. அந்தப் பாலத்தை உங்கள் வீட்டில் காசில் கட்டினீர்களா ஸ்டாலின் சார்? உங்களிடம்தான் சொந்தமாக கார் கூட இல்லையே சார்? முதல்வர் என்பவர் மக்களின் வேலைக்காரன். முதல்வர் என்றால் மக்களின் முதலாளி கிடையாது. தமிழகத்துக்கு நீங்கள்தான் முதலாளி போல பேசுகிறீர்கள்.

தவெக ஆட்சியை குறுக்கு வழியில் கவிழ்க்க திமுக திட்டம் போடுகிறது. தவெக ஆட்சியை யாராலும் அசைக்க முடியாது. ஆட்சியமைக்கும் போது மக்களிடம் அவகாசம் கேட்டேன். இப்போது விஜய் அரசும் கடன் தான் வாங்குகிறது என்கிறார்கள். நான் மக்களுக்கு நல்லது செய்யவே கடன் வாங்குகிறேன், கொள்ளையடிக்க அல்ல. ஆறு சிலிண்டர் தருவதாக சொன்னேன், இப்போது நிதிநிலையை கருத்தில் கொண்டு 3 சிலிண்டர் தந்துள்ளேன். இதனை விமர்சித்து வருகிறார்கள்.

எம்ஜிஆரும், ஜெயலலிதாவும் தீயசக்தி என சொன்ன திமுகவோடு கூட்டணி சேர்ந்து ஆட்சியமைக்க அதிமுக முயற்சி செய்ததால் அக்கட்சியின் தொண்டர்களுக்கு பெரும் மனவலி ஏற்பட்டது. இதனால்தான் மரகதம் குமரவேல் நம்மிடம் வந்து சேர்ந்தார். எம்ஜிஆர், ஜெயலலிதாவை போல எனக்கும் திமுக தான் எதிரி.

எப்போது பார்த்தாலும் பாஜக உள்ளே வந்துவிடும் என்று பூச்சாண்டி காட்டுவார்கள். இப்போது என்ன ஆச்சு, பாஜகவே மூச்சுவிட திணறுகிறது. திமுக வேறு, பாஜக வேறு அல்ல. டெல்லியில் உள்ள திமுகவுக்கு பெயர் பாஜக, தமிழகத்தில் உள்ள பாஜகவுக்கு பெயர்தான் திமுக. எப்போது தொகுதி மறுவரையறை மசோதா திரும்ப வரும், எப்போது பாஜகவுடன் சேரலாம் என திமுக காத்துக்கொண்டுள்ளது. இடைத்தேர்தலில் திமுக வென்றுவிட்டால், ஜனவரி மாதத்தில் தவெக ஆட்சி கலையும் என திமுக பேசுகிறது. திமுக, பாஜக, அதிமுக எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்.

இந்த விஜய்யையும், விஜய் கூட உள்ள மக்களையும் தொடாதீர்கள். அப்புறம் ஏன் தொட்டோம் என காலத்துக்கும் புலம்புவீர்கள். நம் மீது எந்தக் குற்றச்சாட்டு வைக்க முடியவில்லை என்ற விரக்தியில், தமிழக பெண்களை அசிங்கமாக திமுக பேசுகிறது. இதனை ஸ்டாலினும், அவரது குடும்பத்தினரும் பார்த்து ரசிக்கிறார்கள்.

தமிழகத்தில் இளம்பெண்களை, பச்சைப் பிள்ளைகளை ஒருவன் இத்தனை ஆண்டுகளாக சீரழித்துக்கொண்டு இருந்துள்ளான். அந்த வழக்கை திமுக ஆட்சியில் மூடி மறைத்துள்ளார்கள். இதுபற்றி தமிழகமே கேள்வி கேட்கிறது, வாயைத் திறங்கள் ஸ்டாலின் சார். இந்த விவகாரத்தில் அதிமுகவும் வாயை திறக்கவில்லை. இதில் கூடவா கூட்டு?

பெண்கள் பாதுகாப்புக்கே பிறந்தது போல பேசும் திமுக, அதிமுகவும், அந்த ஆளைப் பற்றி வாய் திறக்கவே இல்லை. ஆனால் அந்தக் குற்றவாளியை உள்ளே தூக்கி வைத்துவிட்டோம். பச்சைப் பிள்ளைகளின் வலியை பேச முடியவில்லை என்றால் என்ன அரசியல் செய்கிறீர்கள். எனவே, இந்த இடைத்தேர்தலில் திமுக, அதிமுகவுக்கு பாடம் புகட்ட வேண்டும்." என்றார்.

## தலைமைத் தேர்தல் ஆணையர் 48 மணி நேரத்தில் பதவி விலகாவிட்டால் நாடு முழுவதும் போராட்டம்: அபிஜித் திப்கே எச்சரிக்கை



புதுடெல்லி: செப்.26–

தேர்தல் ஆணையர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு நிலவுவதாக முன்னணி ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டது. இதையடுத்து, தலைமைத் தேர்தல் ஆணையத்தை எதிர்க் கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன.

இந்நிலையில், கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் (சிஜேபி) நிறுவனர் அபிஜித் திப்கே டெல்லியில் நேற்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "தலைமைத் தேர்தல் ஆணையர் (சிஇசி) ஞானேஷ் குமார் அடுத்த 48 மணி நேரத்துக்குள் பதவி விலக வேண்டும். இல்லாவிட்டால் டெல்லியில் மட்டுமல்லாது நாடு முழுவதும் தர்ணா போராட்டம் நடத்தப்படும்" என்றார். சிஜேபி இணை நிறுவனர் சவுரவ் தாஸ் கூறும்போது, "தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும். இனி நடைபெறவுள்ள அனைத்து தேர்தல்களையும் நிறுத்திவைக்க வேண்டும். எஸ்ஐஆர் அடிப்படையிலான வாக்காளர் பட்டியலை நிறுத்திவைத்துவிட்டு, முந்தைய வாக்காளர் பட்டியலை பயன்படுத்த வேண்டும். எஸ்ஐஆர் தொடர்பான கோப்புகளை உச்ச நீதிமன்றத்தின் தலைமையிலான குழுவின் பாதுகாப்பில் வைக்க வேண்டும். தேர்தல் ஆணையர்களை நியமிப்பது தொடர்பான சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்" என்றார்.

## தலைமைத் தேர்தல் ஆணையர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கக் கோரி சுப்ரீம்கோர்டில் வழக்கு



புதுடெல்லி, செப்.26–

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப் பட்டுள்ளது..ஞானேஷ்குமார் இந்தியாவில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தல்களை நடத்தும் தன்னாட்சி அமைப்பாக தேர்தல் கமிஷன் உள்ளது. நாட்டின் அரசியலமைப்பு நிறுவனங்களில் முக்கியமானதும், மக்களின் வாக்குரிமையை நிலைநாட்டும் அமைப்புமான தேர்தல் கமிஷனில் தலைமை தேர்தல் கமிஷனர் மற்றும் 2 தேர்தல் கமிஷனர்கள் பதவி வகித்து வருகின்றனர். நேர்மையான மற்றும் சுதந்திரமான தேர்தல்களை நடத்துவதுடன், வாக்காளர் பட்டியல் மீதான நடவடிக்கை உள்ளிட்ட தேர்தல் கமிஷனின் நடவடிக்கைகளில் இந்த 3 பேரும் இணைந்து முடிவுகளை எடுப்பது வழக்கம். அந்தவகையில் நாட்டின் தலைமை தேர்தல் கமிஷனராக கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் ஞானேஷ்குமார் நியமிக்கப்பட்டார். அவருக்கு கீழே சுக்பீர் சிங் சந்து, விவேக் ஜோஷி ஆகியோர் தேர்தல் கமிஷனர்களாக உள்ளனர்..தேர்தல் கமிஷனர்கள் அதிருப்திஇந்த நிலையில் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமாருக்கு எதிராக பிற 2 தேர்தல் கமிஷனர்களும் அதிருப்தியை வெளிப்படுத்தி இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.குறிப்பாக, நாடு முழுவதும் நடந்து வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தில் ஏராளமான வாக்காளர்களை நீக்கியது மற்றும் பல்வேறு முக்கிய முடிவுகளுக்கு இவர்கள் அதிருப்தி தெரிவித்து உள்ளனர். அந்தவகையில் கடந்த 10 மாதங்களில் 14 முறை தலைமை தேர்தல் கமிஷனருக்கு எதிராக 2 தேர்தல் கமிஷனர்களும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர். ஆனால் தேர்தல் கமிஷனர்களின் இந்த அதிருப்தியையும் மீறி ஞானேஷ்குமார் தன்னிச்சையாக முடிவு எடுத்திருப்பதாக தகவல் வெளியாகி இருந்தது.. எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுஇது நாடு முழுவதும் எதிர்க்கட்சிகளிடம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. தொடர்ந்து குற்றச்சாட்டுக்கு ஆளாகி வரும் அவருக்கு எதிராக நாடாளுமன்றத்திலும், எதிர்க்கட்சிகள் பதவிநீக்க நோட்டீஸ் அளித்தனர். இரு அவைகளிலும் வழங்கப்பட்ட அந்த நோட்டீசுகளை அவைத்தலைவர்கள் நிராகரித்து விட்டனர்.இந்த சூழலில் அவர் மீது, சக தேர்தல் கமிஷனர்களே அதிருப்தி வெளியிட்டிருக்கும் தகவல் நாடு முழுவதும் அதிர்வலைகளை கிளப்பி இருக்கின்றன. இந்த விவகாரத்தில் ஞானேஷ்குமாரை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன..சுப்ரீம் கோர்ட்டில் வழக்குஇந்நிலையில் மற்ற இரு ஆணையர்களின் ஒப்புதல் இல்லாமல் தன்னிச்சையாக செயல்பட்ட தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 32வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க மனுதாரர் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) தொடர்பான அத்தகைய அனைத்து முடிவுகளும் சட்ட விரோதமானவை என அறிவிக்க வேண்டும் என்றும், அசல் படிவம் 6 ஐ மீட்டெடுக்கவும், திருத்தப் பணியின் போது வாக்காளர் பட்டியலிலிருந்து சுமார் 13 கோடி வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT) மூலம் விசாரணை நடத்தவும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.","

## ஆந்திராவில் பலத்த மழை: இயல்பு வாழ்க்கை பாதிப்பு

அமராவதி: செப்.26–

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக ஆந்திராவின் ஸ்ரீகாகுளம், விஜயநகரம், விசாகப்பட்டினம் ஆகிய கடலோர மாவட்டங்களிலும், குண்டூர், தெனாலி, விஜயவாடா, அமராவதி மற்றும் கோதாவரி ஆகிய மாவட்டங்களிலும் கடந்த 2 நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் பல நீர் நிலைகள் நிரம்பி தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள் உட்பட பல்வேறு சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பலத்த காற்று, மழைக்கு மின் கம்பங்கள், மரங்கள் சாய்ந்தன.

பல ஏக்கர் பரப்பளவிலான பயிர்கள் நாசமாயின. தொடர் கனமழையால் கடலோர ஆந்திராவில் அனைத்து மாவட்டங்களிலும் பள்ளி, கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை விடப்பட்டது. மீட்பு மற்றும் உதவி பணிகள் குறித்து நேற்று மாவட்ட ஆட்சியர்கள், உயர் அதிகாரிகளிடம் முதல்வர் சந்திரபாபு நாயுடு காணொலி மூலம் ஆலோசனை நடத்தினார்.

# நாட்டு நலப்பணித் திட்ட தினத்தை முன்னிட்டு மரக்கன்று நடும் பணி



செஞ்சி, செப். 26

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், ராஜா தேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நாட்டு நலப்பணித் திட்ட தினத்தை முன்னிட்டு மரக்கன்று நடும்பணி நடைபெற்றது.

பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் கே.கே. தேவதாஸ் தலைமை வகித்தார். பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் மாணிக்கம் முன்னிலை வகித்தார்.

இதையடுத்து, பள்ளியின் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் பள்ளி வளாகத்தில் பல்வேறு மரக்கன்றுகளை நட்டு, அவற்றை பராமரிக்கும் பணியையும் மேற்கொண்டனர்.

நிகழ்ச்சியில் பள்ளி உதவி தலைமை ஆசிரியர்கள் ராமசாமி, பாலச்சந்தர் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களை வாழ்த்திப் பேசினர்.

நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஏழுமலை நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மரங்களின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர்கள் சங்கம் சார்பில் மாலை நேர ஆர்ப்பாட்டம்




விழுப்புரம். செப் 26–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டார ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் துறை அலுவலகம் எதிரில் தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர்கள் சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வட்டாரம் தழுவிய மாலை நேர ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்க மாநில செயலாளர் மலர்விழி தலைமை தாங்கி ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து வைத்து மாவட்ட துணை செயலாளர் ஆயிஷா பேகம் முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் அடிப்படை ஊதியம் ரூபாய் 18000 என்ற தேர்தல் வாக்குறுதியை உடனே அமல்படுத்தவும் அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் அனைவரையும் பணி நிரந்தரம் செய்து கால முறை ஊதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட 18 கோரிக்கைகளை முன்வைத்து கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய தலைவர் உஷா, துணைத் தலைவர் மதினா ,ராஜேஸ்வரி, பொருளாளர் காமாட்சி ராணி மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

# மத்தூர் பேருந்து நிலையத்தில் கலை நிகழ்ச்சி மூலம் எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம்



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த மத்தூர் பேருந்து நிலையத்தில் நாட்டுப்புறக் கலை சார்பில் எச்.ஐ.வி/ எய்ட்ஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

பொதுமக்களுக்கு எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நோய்த் தொற்றை ஆரம்பத்திலேயே கண்டறியும் நோக்கிலும் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்திருந்த பயணிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில், கலை வளர் மணி கமலக்கண்ணன் 'பாரதி கிராமிய கலை வளர்ச்சி மையம்' குழுவினர் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு நாடகம் நடைபெற்றது. எய்ட்ஸ் நோயின் பாதிப்புகள், தடுப்பு முறைகள் மற்றும் விழிப்புணர்வு குறித்த கருத்துக்களை கலை வடிவில் மக்களிடம் எளிமையாகக் கொண்டு சேர்த்தனர்.

இந்த நிகழ்வில் ஐ.சி.டி.சி திட்ட மேர்பார்வையாளர் அருள் வரவேற்புரையாற்றினார்.

மத்தூர் முதன்மை மருத்துவ அலுவலர் மருத்துவர் அபிராமி சிறப்புரையாற்றி, நோய் தடுப்பு முறைகள் குறித்து கருத்துரைகளை வழங்கினார்.

மேலும் இணைப்பு மைய அலுவலர் பிரபு, களப்பணியாளர் அருணா, ஜெயா, செண்பகம், மற்றும் ஆலோசகர் ராஜ்கன்னு ஆகியோர் முகாமிற்கான ஏற்பாடுகளைச் செய்து ஒருங்கிணைத்தனர்.

நிறைவாக மத்தூர் ஐ.சி.டி.சி ஆலோசகர் ஸ்ரீதேவி நன்றி உரை ஆற்றினார். இதில் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு இலவச பரிசோதனை செய்து பயன் அடைந்தனர்.

# கூடுதல் பொறுப்பு



கோவை மேற்கு மண்டல ஐஜி ரம்யா பாரதிக்கு கோவை மாநகர காவல் ஆணையர் பொறுப்பு கூடுதலாக ஒதுக்கீடு கோவை மாநகர ஆணையர் கண்ணன் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்ட நிலையில் தமிழ்நாடு அரசு உத்தரவு

# 30ம் தேதி உண்ணாவிரத போராட்டம்: செவிலியர்கள் சங்கம் அறிவிப்பு

சென்னை: செப்.26–

சென்னையில் தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தின் பொதுச்செயலாளர் சுபின் நிருபர்களிடம் கூறியதாவது: 4724 செவிலியர்கள் காலி பணியிடங்கள் நிரப்பப்படும் என்றும் அவர்கள் எந்த காரணத்தை கொண்டும் நிரந்தரமாக்கப்பட மாட்டார்கள், அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே அவர்கள் பணியில் இருப்பார்கள் என்றும் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனைகளில் நிரந்தர ஊழியர்களே இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில் இந்த அரசாணை செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு செவிலியர்கள் சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவித்து, வரும் 28 மற்றும் 29ம் தேதிகளில் அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக கருப்பு பட்டை அணிந்து பணியாற்ற உள்ளோம். மேலும் வரும் 30ம் தேதி சென்னை சிவானந்த சாலையில் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ள இருக்கிறோம்.

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் தவெக கூட்டணிக்கு தமாகா ஆதரவு: ஜி.கே.வாசன் அறிவிப்பு

சென்னை: செப்.26–

தமாகா தலைவர் ஜி.கே.வாசன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி தந்திருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜரை கொள்கை தலைவராக ஏற்றுக்கொண்டு செயல் படுகின்ற தவெகவின் தலைவரும், தமிழக முதல்வருமான விஜய், மக்களுக்கு நேர்மையான ஆட்சியை, வெளிப்படையான, ஊழலற்ற நிர்வாகத்தை கொடுக்க தொடங்கி இருக்கிறார்கள்.



பெருந்தலைவர் காமராஜர், ஜி.கே.மூப்பனார் ஆகியோரின் எண்ணங்களுக்கு ஏற்றவாறு வளமான தமிழகத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. எனவே புதிய தவெக அரசின் நல்ல முயற்சிக்கு நடைபெற இருக்கின்ற மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் தவெகவின் மதச்சார்பற்ற சமூகநீதி வெஙூற்றிக்கூட்டணிக்கு தமாகா ஆதரவளிக்கிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் காருக்குள் சிக்கிய குழந்தை அரை மணி நேரம் போராடி கண்ணாடியை உடைத்து குழந்தையை மீட்ட மருத்துவமனை ஊழியர்கள்



திருவள்ளூர் செப் 26 : திருவள்ளூர் மாவட்டம் நசரத்பேட்டை வரதராஜபுரம் பகுதியைச் சேர்ந்தவர் விஷால். இவரது மனைவிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்துள்ளார். இந்நிலையில் அவரை மருத்துவமனையில் பார்க்க வந்த விஷால் தனது குழந்தையை காரில் உட்கார வைத்து விட்டு, சாவியை எடுக்காமல் காருக்கு வெளியே நின்று பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது காரின் கண்ணாடி ஏற்றப்பட்டிருந்த நிலையில் குழந்தை தெரியாமல் கார் கதவை மூடியதால் கார் கதவு தானாக உள்பக்கமாக தாழிட்டுக் கொண்டது.இதில் காருக்குள்ளேயே சாவி இருந்ததால் கார் கதவை திறக்க முடியாத நிலை ஏற்பட்டது. சிறிது நேரத்தில் காருக்குள் இருந்த குழந்தை அழுது கூச்சலிடவே அக்கம் பக்கத்தினர் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் காரின் கண்ணாடி மேல் ஸ்டிக்கரை ஒட்டி சுமார் அரை மணி நேரம் கார் கண்ணாடியை இறக்கி குழந்தை மீட்க போராடினர்.

ஆனால் அந்த முயற்சி பலன் அளிக்காததால் காரின் பக்கவாட்டு கண்ணாடியை உடைத்து காருக்குள் இருந்த சாவியை ஆன் செய்து லாக்கை ஓப்பன் செய்து குழந்தையை பாதுகாப்பாக மீட்டனர்.மனைவியை மருத்துவமனையில் அனுமதித்த நிலையில் சிகிச்சை பெற்று வருபவரை பார்க்க வந்த கணவர் குழந்தையை காரில் அமர வைத்த நிலையில் குழந்தை கார் கதவை மூடியதால் உள்ளே சிக்கி மீட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




ஈரோடு மாவட்டம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உலக சுற்றுலா தினம் 2026யை முன்னிட்டு சுற்றுலாவை மறுவடிவமைப்பதற்கான டிஜிட்டல் செயல்திட்டம் மற்றும் செயற்கை நுண்ணறிவு குறித்த கருத்தரங்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

# ரோட்டரி சங்கம் சார்பில் தனித்திறன் மாணவர்கள் மையத்திற்கு குடிநீர் இயந்திரம்




புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஃபோர்ட் சிட்டி ரோட்டரி சங்கம் சார்பில் அறந்தாங்கி நகரில் இயங்கி வரும் மாற்றுத் திறன் மாணவர்கள் மையத்திற்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கப்பட்டது.

அறந்தாங்கி ஃபோர்ட் சிட்டி ரோட்டரி சங்கத்தின் தலைவர் வழக்கறிஞர் தெய்வரெத்தினம் தலைமையில் வட்டார வளமைய மேற்பார்வையாளர் ஸ்ரீ தேவி அனைவரையும் வரவேற்றார்.

சங்கத்தின் பொருளாளர் மருத்துவர் செல்ல செந்தமிழ் செல்வன், ஆர்ஆர்ஏ டெக்னாலஜி நிர்வாக இயக்குனர் ரியாஸ் அகமது ஆகியோர் முன்னிலையில் முன்னாள் மாவட்ட அரசு வழக்கறிஞர் பா. வெங்கடேசன் தனித்திறன் மாணவர்கள் மையத்திற்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கினார்.

சங்கத்தின் செயலாளர் முனைவர் முபாரக் அலி மாண வர்கள் அனைவருக்கும் பரிசுகளை வழங்கி கலை நிகழ்ச்சியை துவங்கி வைத்தார்.

முன்னாள் பொருளாளர் அப்துல் காதர், நகராட்சி பள்ளி துணை தலைமை ஆசிரியர் நிர்மல் சகில்தா, மையத்தின் பொறுப்பு ஆசிரியர் ரேவதி ஆகியோர் அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார்கள்.

இறுதியில் தனித்திறன் மாணவர்கள் மையத்தின் இயன்முறை மருத்துவர் சரவணன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# ஜெம் வீரமணி வழக்கு: வீடியோக்களை வெளியிடத் தடை!

சென்னை: செப்.26–

ஜெம் வீரமணி வழக்கில் தொடர்புடைய வீடியோக்களை வெளியிடத் தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வழக்கின் முன்னேற்றம் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் ஒருமுறை செய்திக்குறிப்பு வெளியிடவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. துளிர் அமைப்பு தாக்கல் செய்த மனுவுக்கு ஒன்றிய, மாநில அரசுகள் மற்றும் காவல்துறை உள்ளிட்டோர் பதிலளிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# புதிதாக தொடங்க உள்ள தனியார் பார்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது: மணல் கும்பல் மீது நடவடிக்கை எடுக்க கோரிக்கை.



திண்டுக்கல் செப்டம்பர் 26

திண்டுக்கல் மாவட்டம் அய்யலூரில் அம்பேத்கர் மக்கள் இயக்கம் ஆதித்தமிழர் பேரவை மற்றும் தோழமை இயக்கங்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் அய்யலூர் பேருந்து நிறுத்தம் அருகில் நேற்று மாலை பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்றது கண்டன ஆர்ப்பாட்டத்தில் தூய்மை பணியாளர்களை பணி நிரந்தரம் மற்றும் ஊதியத்தை உயர்த்திடவும் வேடசந்தூர் சுற்றியுள்ள பகுதிகளில் தொழிற்சாலைகளுக்கு ஆட்களை ஏற்றி செல்லும் வாகனங்களை முறையாக மோட்டார் வாகன ஆய்வாளர் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவும் அரசு மதுபான கடைகளை மூடுவது போல் கண் தொடைப்பாக மூடிவிட்டு அய்யலூர் தனியார் பார் வசதிக்கு அனுமதி தருவதை முற்றிலும் கைவிடவும், மின்வெட்டினை சரி செய்யக்கோரியும் அய்யலூரில் புதிதாக தொடங்க உள்ள தனியார் பாருக்கு அனுமதி வழங்கக் கூடாது எனவும் தங்கமாபட்டி அரசு பள்ளியில் மலம் கலந்த நபரை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க கோரியும் வடமதுரை அய்யலூர் பகுதிகளில் மனமகிழ் மன்றம் என்ற பெயரில் சூதாட்ட கிளப்புகளை தடை செய்ய கோரியும் வடமதுரை அய்யலூர் பகுதிகளில் மணல் கடத்தும் கும்பலையும் அதற்கு துணை போகும் அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க கோரியும் கண்டன கோஷங்கள் எழுப்பினர் ஆர்ப்பாட்டம் அம்பேத்கர் மக்கள் இயக்க மாவட்ட தலைவர் ஏ பி எஸ் நாகராஜன் தலைமையில் ஆதித்தமிழர் பேரவை ஒன்றிய செயலாளர் கனகராஜ் முன்னிலையில் தூய்மை பணியாளர் சங்க மாநிலத் தலைவர் காளிராஜ், உயிர் வனம் மக்கள் விழிப்புணர்வு அறக்கட்டளை நிறுவனர் கவியோவியதமிழன், மற்றும் ஏராளமான நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர் ஆதித்தமிழர் பேரவை அய்யலூர் நகர செயலாளர் பாரதி ஜனகராஜ் நன்றி தெரிவித்தார்.

## டீசல் மானியம், தடைக்கால நிவாரணத் தொகையை உயர்த்த வழங்க வேண்டும் என மீன்வளத்துறை அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவிடம் விசைப்படகு உரிமையாளர்கள் கோரிக்கை.



புதுச்சேரி. செப்.26–

புதுச்சேரியில் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள விசைப்படகு உரிமையாளர் சங்கத்தின் தலைவர் வேலு தலைமையில், சங்க நிர்வாகிகள் மற்றும் விசைப்படகு உரிமையாளர்கள், மீன்வளத்துறை அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவை சட்டப்பேரவையில் மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்.

இந்த சந்திப்பின் போது, மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவிடம் முன்வைத்தனர்.

குறிப்பாக, மீன்பிடி தொழிலுக்கு வழங்கப்படும் டீசல் மானிய விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும், மீன்பிடித் தடைக் காலத்தில் வழங்கப்படும் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். மீனவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்த அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவ், அவற்றை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

## ஈரோட்டில் 3வது தேசிய பாரா வாலிபால் சாம்பியன்ஷிப் போட்டி தொடக்கம்



ஈரோடு செப்டம்பர் 26

ஈரோடு திண்டல் வேளாளர் வித்யாலயா சிபிஎஸ்இ பள்ளியில், பாரா வாலிபால் பெடரேஷன் ஆஃப் இந்தியா மற்றும் தமிழ்நாடு பாரா வாலிபால் அசோசியேஷன், உறவுகள் அறக்கட்டளை இணைந்து நடத்தும் 3 வது தேசிய பெடரேஷன் கோப்பை 2026 (பாரா வாலிபால் சாம்பியன்ஷிப்) போட்டி நேற்று தொடங்கியது.

தமிழ்நாடு பாரா வாலிபால் சங்கத் தலைவர் டாக்டர் மக்கள் ஜி. ராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மேலும், ஈரோடு மாவட்ட விளையாட்டு அலுவலர் சி. திவ்யா நாகேஸ்வரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் எஸ். சங்கர் கணேஷ், தமிழ்நாடு மாஸ்டர்ஸ் வாலிபால் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் ஆர். ராஜரத்தினம் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர்.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து பங்கேற்கும் பாரா வாலிபால் வீரர்களுக்கான இப் போட்டி, மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களின் திறமையை வெளிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிகழ்ச்சியின் முடிவில் ஈரோடு மாவட்ட பாரா வாலிபால் சங்கத் தலைவர் எஸ். விஜய ராகவன் நன்றியுரை வழங்கினார்.

## விடுமுறையை பயனுள்ள முறையில் கழிக்க மாணவர்களுக்கு வாய்பாடு..!



வந்தவாசி , செப் 26:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் பஜார் வீதி, ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி (மேற்கு) மாணவர்களுக்கு காலாண்டு விடுமுறையை பயனுள்ள முறையில் கழிக்க அரிச்சுவடி வாய்ப்பாடு (எண்சுவடி) வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியை(பொ) சுஜாதா தலைமை தாங்கினார். மாவட்ட எக்ஸ்னோரா நிர்வாகி மலர் சாதிக் முன்னிலை வகித்தார். சமூக ஆர்வலர் மஹாவீர் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் பங்கேற்று, காலாண்டு விடுமுறையை மாணவர்கள் பயனுள்ள முறையில் கழிக்க வேண்டும் என்றும், ஏரி, குளம், குட்டைகளில் தனியாக சென்று குளிக்க கூடாது என்றும் வலியுறுத்தினார். மேலும் மாணவர்களுக்கு அரிச்சுவடி வாய்பாடு (எண் சுவடி) வழங்கப்பட்டது. மேலும் மாணவர்கள் திருக்குறள், ஆத்திசூடி ஒப்பித்தல் நிகழ்வுகள் நடைபெற்றது.

## சென்னையில் செல்லப்பிராணிகளான நாய், பூனை உள்ளிட்டவற்றை கைவிட்டால் ரூ.10,000 அபராதம்" சென்னை மாநகராட்சி எச்சரிக்கை

சென்னை: "சென்னையில் செல்லப்பிராணிகளான நாய், பூனை உள்ளிட்டவற்றை கைவிட்டால் ரூ.10,000 அபராதம் விதிக்கப்படும்" என சென்னை மாநகராட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது. செல்லப்பிராணிகள் தொடர்பாக சென்னை மாநகராட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 'சாலைகள், பொது இடங்களில் கைவிடப்பட்டும் செல்லப் பிராணிகளை மாநகராட்சி பிடித்து ஆய்வு செய்யும். செல்லப்பிராணிகளிடம் உள்ள மைக்ரோசிப், ஸ்கேனர் மூலம் ஸ்கேன் செய்யப்படும். மைக்ரோசிப் எண் மூலம் உரிமையாளர் விவரம் அறிந்து அபராதம் விதிக்கப்படும்' என சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

## தனிஷ் அகமது இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் 'நக்சத்திரா 2026' புதுமுக மாணவர் வரவேற்பு விழா



கோவை செப்:26

கோவை வேலந்தாவளம் சாலையில் அமைந்துள்ள தனிஷ் அகமது இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் புதிதாகக் கல்லூரியில் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் வகையில் 'நக்சத்திரா 2026' புதுமுக மாணவர் வரவேற்பு விழா நடைபெற்றது. நிகழ்வில் 'நிலா' எனப் பெயரிடப்பட்ட ஊடாடும் மனித உருவ ரோபோ காட்சிப்படுத்தப்பட்டது .புதுமுக மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர் மீது ட்ரோன்கள் மூலம் மலர்கள் தூவப்பட்டன.

விழாவில் வரவேற்புரையாற்றிய கல்லூரி இயக்குநர் டாக்டர் அருள் குழந்தைவேல், பொறியியல் கல்வியில் அறிவைப் பெறுவதோடு, குழுவாக இணைந்து செயல்படும் திறன், தொடர்ந்து புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளும் ஆர்வம் ஆகியவற்றை மாணவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். கல்லூரியில் கிடைக்கும் நான்கு ஆண்டு கால வாய்ப்புகளை மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், பொறியியல் துறையில் செயற்கை நுண்ணறிவின் (AI) முக்கியத்துவம் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

கல்லூரியின் கல்வி மற்றும் தொழில்துறை சார்ந்த சாதனைகள் குறித்துப் பேசிய அவர், அதிகபட்சமாக ஆண்டுக்கு ரூ.21 லட்சம் ஊதியத்துடன் வேலைவாய்ப்பு பெற்ற மாணவர்கள் இருப்பதாகவும், 20க்கும் மேற்பட்ட தொடக்க நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், 50க்கும் மேற்பட்ட காப்புரிமைகள் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், சுமார் 300 மாணவர்கள் ழிநிஜிணிலி சான்றிதழ் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளதாகவும் கூறினார்.

தனிஷ் ஐடெக் தலைமைச் செயல் அலுவலர் ஏ. தமீஸ் அகமது, தனது வாழ்த்துரையில், தொடர்ச்சியான கற்றல், புதுமையான சிந்தனை மற்றும் தொழில்சார் திறன் வளர்ப்பின் அவசியத்தை எடுத்துரைத்தார். கல்லூரியில் கிடைக்கும் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும் என்றும், சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனுள்ள வகையில் தங்களது பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

விழாவுக்குத் தலைமை வகித்த தனிஷ் ஐடெக் நிர்வாக இயக்குநர் கே.ஏ. அக்பர் பாஷா, தரமான கல்வியுடன் ஒழுக்கமும் மாணவர்களின் வளர்ச்சிக்கு அடிப்படையானது என்று குறிப்பிட்டார். கல்வித் துறையில் ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக நிறுவனம் மேற்கொண்டு வரும் பணிகளைச் சுட்டிக்காட்டிய அவர், தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப கல்வியை வழங்குவதில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாகவும், ஒன்பது புதிய தலைமுறைப் பாடப்பிரிவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

விழாவின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சிறப்புரையாளர் டாக்டர் ஜெயந்திஸ்ரீ பாலகிருஷ்ணன், பெற்றோர் தங்களது குழந்தைகளுக்கு தேவையான சுதந்திரத்தை வழங்குவதுடன், பொறுப்புணர்வுடன் செயல்படுவதற்கும் வழிகாட்ட வேண்டும் என்று அறிவுறுத்தினார். குழந்தைகளின் கல்வி, கல்வி முன்னேற்றம், திறன் வளர்ச்சி மற்றும் மேம்படுத்த வேண்டிய பகுதிகள் குறித்து பெற்றோர் அவர்களுடன் தொடர்ந்து கலந்துரையாட வேண்டும் என்றும் தெரிவித்தார். மாணவர்கள் கல்லூரி வாழ்க்கையைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். தெளிவான இலக்குகளை நிர்ணயித்து, நம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் செயல்பட்டால் எதிர்காலத்தில் சிறந்த வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

விழாவின் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்ட Hackup Technology Pvt. Ltd. நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தினேஷ் பரந்தகன் (இந்தியா மற்றும் கனடா), தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவுத் துறையில் தமக்குக் கிடைத்த அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார். செயற்கை நுண்ணறிவு மற்றும் இணையப் பாதுகாப்புத் துறைகளின் எதிர்கால வளர்ச்சி குறித்துப் பேசிய அவர், இணையத் தாக்குதல்களைத் தடுப்பது, தனிநபர் தரவுகளைப் பாதுகாப்பது மற்றும் எத்திக்கல் ஹேக்கிங் தொடர்பான அடிப்படை விழிப்புணர்வை மாணவர்கள் பெற்றிருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து, கல்லூரியின் துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை கல்லூரி முதல்வர் டாக்டர் ஜான் பாரூக் ஒருங்கிணைத்தார்.

அறிவியல் மற்றும் மானுடவியல் துறைத் தலைவர் மற்றும் மினிகிசி தலைவர் டாக்டர் ஜெ. சதீஷ் குமார் நன்றி கூறினார்.

விழாவின் ஒரு பகுதியாக முதலாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் பங்கேற்ற பலூன் நிகழ்ச்சி நடைபெற்றது. மாணவர்கள் தங்களது இலக்குகளை பலூன்களில் எழுதி அவற்றை வானில் பறக்கவிட்டனர்.

## ஜூன் 2012 முதல் ஜூன் 2023 ஆண்டு வரை 10ம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு மார்ச் 2019 முதல் ஜூன் 2023 தனித்தேர்வர்கள் அசல் மதிப்பெண் சான்றிதழ் : மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தகவல்



திருவள்ளூர் செப் 26 :

திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்ட தனித்தேர்வு மையங்களில் ஜூன் 2012 முதல் ஜூன் 2023 வரையிலான பருவங்களில் பத்தாம் வகுப்பு, மார்ச் 2019 முதல் ஜூன் 2023 பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு மற்றும் துணைத்தேர்வு எழுதிய தனித்தேர்வர்களுக்கு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட பின் அம்மதிப்பெண் சான்றிதழ்கள் அவர்கள் தேர்வெழுதிய அந்தந்த தேர்வு மையங்களில் நேரடியாக விநியோகம் செய்யப்பட்டது.

எனினும் தேர்வு எழுதிய தேர்வு மையங்களில் நேரடியாக சென்று மதிப்பெண் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளாத தனித்தேர்வர்களின் சான்றிதழ்கள் மீள இவ்வலுவலகத்தில் பெறப்பட்டு இந்நாள் வரை வெகு நாட்களாக கோரப்படாமல் அதிகளவில் தேக்கமடைந்துள்ளன.

தேர்வுத்துறை விதிமுறைகளின்படி தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு 2 வருடங்கள் கழித்து தனித்தேர்வர்களால் பெற்றுக் கொள்ளப்படாத மதிப்பெண் சான்றிதழ்கள் அனைத்தும் உரிய அரசாணையின்படி கழிவுத்தாட்களாக அழிக்கப்படுதல் வேண்டும்.

அதன்படி, நீண்ட நாட்களாக தேக்கமடைந்துள்ள அச்சான்றிதழ்களை அழித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, இதுநாள் வரை மதிப்பெண் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளாத தனித்தேர்வர்கள் தற்போது வழங்கப்படும் இறுதி வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு 31.12.2026க்குள் இவ்வலுவலகத்தை நேரில் அணுகி தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு அல்லது தற்காலிக மதிப்பெண் பட்டியலை சமர்ப்பித்து மதிப்பெண் சான்றிதழ் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட கால அவகாசத்திற்குப்பின் அசல் மதிப்பெண் சான்றிதழ் அழிக்கப்பட்டு விடும் என்றும் இதன் பின்னர் சான்றிதழ்களைப் பெற விரும்புவோர் இரண்டாம்படி சான்றிதழுக்குரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தால் மட்டுமே பெற்றுக் கொள்ள இயலும். அலுவலக முகவரி: அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், முதன்மைக் கல்வி அலுவலக வளாகம் (இரண்டாம் தளம்), திருவள்ளூர் 602 001. தொலைப்பேசி எண். 044 27666004 என்ற முகவரியை அணுகலாம் என மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.

## காலை உணவுத் திட்டம்: ஆசிரியர்கள் ருசித்து பார்த்த பிறகே மாணவர்களுக்கு பரிமாற வேண்டும் பள்ளிக்கல்வித்துறை உத்தரவு

சென்னை: செப்.26–

காலை உணவை ஆசிரியர்களே ருசித்து பார்த்த பிறகே மாணவர்களுக்கு பரிமாற வேண்டும் என பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் ஊட்டச்சத்து தேவையைப் பூர்த்தி செய்வதோடு, கல்விச் செயல்பாட்டையும் மேம்படுத்தும் நோக்கில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இத்திட்டம் முதலில் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில், தற்போது ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த விரிவாக்க சூழலில் உணவின் தரம் மற்றும் உடல்நலப் பாதுகாப்பில் எவ்வித சமரசமும் இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்திப் பள்ளிக்கல்வித்துறை அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

திட்டத்தின் முக்கிய அம்சமாக, சமைக்கப்பட்ட காலை உணவை மாணவர்களுக்கு வழங்குவதற்கு முன்பாக ஆசிரியர்கள் அதை ருசித்து தரத்தை உறுதி செய்ய வேண்டும். உணவு சரியான வெப்பநிலையில், சுவையாகவும், ஊட்டச்சத்து மிகுந்ததாகவும் இருப்பதை ஆசிரியர்கள் நேரடியாக சரிபார்த்த பின்னரே மாணவர்களுக்கு பரிமாற வேண்டும். இதன் மூலம் எதிர்பாராத விபரீதங்கள் தடுக்கப்படும். உணவுத் தரத்தில் எந்தவித சமரசமும் அனுமதிக்கப்படாது என்பதை பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது.

## பேரூரள்ளி அரசு அலுவலகத்தில் கொசு மருந்து தெளிப்பு



போச்சம்பள்ளி: கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி தாலுகா, மறுதேறி பஞ்சாயத்துக்குட்பட்ட பேரூரள்ளி அரசு அலுவலகத்தில் டெங்கு, எலி காய்ச்சல், உன்னி காய்ச்சல் உள்ளிட்ட நோய்களைத் தடுக்கும் வகையில் கொசு மருந்து தெளிக்கும் பணி நடைபெற்றது.

சுகாதாரத்துறை சார்பில் நடைபெற்ற இப்பணியில் ஹெல்த் இன்ஸ்பெக்டர் ஹரிபாபு, கிளர்க் சக்திவேல் உள்ளிட்ட தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டு அரசு அலுவலக வளாகம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கொசு மருந்து தெளித்தனர். மேலும், கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

# திருவண்ணாமலை அருகே வளர்ச்சி பணிகள் ஆய்வு மழைநீர் தேங்காத வகையில் முன்னேற்பாடு மேற்கொள்வது அவசியம்

## *அதிகாரிகளுக்கு கலெக்டர் உத்தரவு

கீழ்பென்னாத்தூர் : செப்.26–

கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அனைத்து துறை வளர்ச்சி திட்டப்பணிகளை கலெக்டர் வந்தனாகார்க் நேற்று ஆய்வு மேற்கொண்டு மழைநீர் தேங்காத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தினார்.



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அனைத்து துறைகளின் பணிகள் குறித்து கலெக்டர் வந்தனா கார்க் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அதன்படி கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வேட்டவலம் அடுத்த கோணலூர் ஊராட்சியிலுள்ள நியாய விலைக்கடையில் பொருட்களின் இருப்பு ஆய்வு செய்து, அவற்றை முறையாக விநியோகிக்கப்படுகிறதா? என்பது குறித்தும், பொருட்கள் வழங்கியதற்கான பதிவேடுகளில் விவரம் முறையாக பதிவு செய்யப்படுகிறதா? என்பது குறித்தும் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து கோணலூர் ஊராட்சி அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் வருகை பதிவேடு மற்றும் குழந்தைகளின் எடை மற்றும் உயரம் குறித்த விவரங்கள் பதிவேடுகளில் முறையாக பதிவிடப்பட்டுள்ளதா என ஆய்வு செய்து குழந்தைகளுக்கு சுகாதாரமான உணவு வழங்கப்படுகிறதா என சோதனை மேற்கொண்டார்.

இதேபோல் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளியில் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து நாடழுகானந்தல் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ரூ.9,80,000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நாற்றாங்கால் பண்ணையில் பல்வேறு வகையான மரச்செடிகள் வளர்க்கப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு நாற்றாங்கால் பண்ணையில் மரக்கன்றை நட்டு வைத்தார்.

நாடழுகானந்தல் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் புதிய குளம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதையும், கால்நடை மருந்தகத்தையும் ஆய்வு மேற்கொண்டு மருந்தகத்தில் உள்ள மருந்துகளின் விவரம், இதுவரை கால்நடைகளுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை விவரம் குறித்து கேட்டறிந்தார்.

மேலும் ராஜந்தாங்கல் ஊராட்சியில் ஊராட்சி பொதுநிதியின்கீழ் ரூ.7 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய பயணியர் நிழற்குடை, ரூ.8 லட்சத்து 44 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய மதிய உணவு கூடம் கட்டப்பட்டு வருவதை ஆய்வு மேற்கொண்டார்.

ஆவூர் ஊராட்சியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்பாடுகள் குறித்தும், மருந்து இருப்பு குறித்தும்,பிரசவ சேவை மையத்தில் ஆய்வு மேற்கொண்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து வேட்டவலம் சமூகநீதி பள்ளி மாணவியர் விடுதியிலும், வேட்டவலம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் அடிப்படை வசதிகளை ஆய்வு மேற்கொண்டு மாணவிகளுடன் கலந்துரையாடி பொது தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி அளித்த ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கினார். மேலும் ரூ.1 கோடியே 44 இலட்சத்து 27 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள புதிய 7 வகுப்புறை கட்டிடத்தை பார்வையிட்டார்.

தொடர்ந்து பேரூராட்சி ராஜாஜி தெருவிலுள்ள அங்கன்வாடி மையம், மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம், புதிய சார் பதிவாளர் அலுவலகம் கட்டப்பட உள்ள பகுதி ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டார்.

குறிப்பாக அனைத்து இடங்களிலும் மழைநீர் தேங்காமல் இருக்கவும், டெங்கு கொசு புழுக்கள் உற்பத்தி ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவது அவசியம் என அதிகாரிகளுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மதுசெழியன், செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) சிவநாத், உதவி இயக்குநர் (ஊராட்சிகள், திருவண்ணாமலை கிழக்கு) விமலன், மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் வெங்கடரமணன்,திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம்) அன்பரசி, வட்டார வளர்ச்சி அலுவலர் லட்சுமி. கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் இந்திரா, வேட்டவலம் பேரூராட்சி செயல் அலுவலர் வ.வரலட்சுமி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.




திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பல்நோக்கு கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை தடுப்பு பணிகள், தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம், டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் நல வாழ்வு மையம் குறித்தும் மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தலைமையில் நடைபெற்றது. இதில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை கூடுதல் இயக்குநர் (சென்னை) ஜெ.நிர்மல்சன், மாவட்ட சுகாதார அலுவலர் பிரியா ராஜ் (திருவள்ளூர்) ஆவடி மாநகராட்சி நல அலுவலர் சரஸ்வதி, பூவிருந்தவல்லி நல அலுவலர் பூபதி, மருத்துவர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரத்திக் தாயள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பாலாஜி, வேளாண்மை இணை இயக்குனர் சாந்தாமணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஜெயராணி, தோட்டக்கலை துணை இயக்குனர் சரண்ா, வேளாண் பொறியியல்துறை செயற்பொறியாளர் சிவக்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஜெயராமன் உள்ளிட்ட அரசுத்துகைளின் உயர் அலுவலர்கள் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# சேலம் அனல் மின் நிலையத்தில் பாய்லர் டியூப் வெடித்து 210 மெகாவாட் மின் உற்பத்தி பாதிப்பு.

சேலம், செப்.26–

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் பாய்லர் டியூப் வெடித்தன் காரணமாக 210 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம் மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 2 பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. முதல் பிரிவில் தலா 210 மெகாவாட் திறன் கொண்ட 4 அலகுகள் மூலம் 840 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இரண்டாவது பிரிவில் 600 மெகாவாட் திறன் கொண்ட ஓர் அலகு மூலம் 600 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இரண்டு பிரிவுகளிலும் தினசரி 1,440 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்நிலையில், முதலாவது பிரிவில் முதல் அலகில் பாய்லர் டியூப் வெடித்தன் காரணமாக 210 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனை சரிசெய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே, முதல் பிரிவின் 3 அலகில் வருடாந்திர பராமரிப்பு பணிகள் நடந்து வருவதால் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.

அனல் மின் நிலையத்தில் 2 மற்றும் 4 ஆகிய 2 அலகில் சேர்த்து 380 மெகாவாட் மின் உற்பத்தியும், 2வது பிரிவில் 380 மெகாவாட் மின் உற்பத்தி என மொத்தமாக 760 மெகாவாட் மின் உற்பத்தி நடந்து வருகிறது என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மொத்தம் 1,440 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் நிலையத்தில் தற்போது 760 மெகாவாட் மின் உற்பத்தி நடந்து வருகிறது.

# மின் கட்டண கணக்கீட்டு பணியை தனியாரிடம் ஒப்படைக்க மின்வாரியம் முடிவு..!!

சென்னை: செப்.26–

மின் கணக்கீட்டுப் பணிகளில் ஏற்பட்டுவரும் காலதாமதத்திற்கு தீர்வு காணும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றாலும், காலிப் பணியிடங்களை நிரந்தர ஊழியர்களை கொண்டு நிரப்ப வேண்டும் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு மத்தியில், இத்துறை பணியை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவு ஊழியர்கள் மற்றும் நுகர்வோர் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மின் கணக்கீட்டாளர் பற்றாக்குறை காரணமாக இதுவரை ஓய்வுபெற்ற பணியாளர்கள் மூலமாகவும், ஏற்கனவே பணியில் உள்ள ஊழியர்களுக்கு கடுமையான கூடுதல் பணிச்சுமை வழங்கியும் பணிகள் அரைகுறையாக நடைபெற்று வந்ததால், வழக்கமான பில்லிங் சுழற்சியில் பெரும் காலதாமதம் ஏற்பட்டு வந்தது. இதற்கு தீர்வாக, வரும் அக்டோபர் மாதம் முதல் 6 மாத காலத்திற்கு வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளி முறையில் தகுதிவாய்ந்த தனியார் ஏஜென்சிகளை தேர்வு செய்து பணிகளை ஒப்படைக்க தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் உத்தரவிட்டுள்ளது.



சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து காவல் துறை மற்றும் அரசுத்துறை அலுவலர்களுடனா
மாதாந்திர ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (25.09.2026)
நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ரவிக்குமார், மேட்டூர் சார் ஆட்சியர் செல்வி அம்ருதா ச குமார், இ.ஆ.ப., மா
காவல் துணை ஆணையர் திரு.மகேந்திரன், இ.கா.ப., (தெற்கு), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி ஷாலின
உள்ளிட்ட வருவாய்த்துறை, காவல்துறை, போக்குவரத்துத்துறை உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

மேட்டூர் சார் ஆட்சியர் செல்வி அம்ருதா ச குமார், மாநகர காவல் துணை ஆணையர் மகேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஷாலினி உள்ளிட்ட வருவாய்துறை, காவல்துறை போக்குவரத்து துறை உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# இயற்கை முறையில் நிலக்கடலை சாகுபடி: செடிக்கு 70 முதல் 100 காய்கள்



மத்தூர்: கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் ஒன்றியம், சிவம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி குமரன், இயற்கை முறையில் நிலக்கடலை சாகுபடி செய்து செடிக்கு 70 முதல் 100 காய்கள் வரை மகசூல் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளாக இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வரும் குமரன், தனது நிலத்தில் மானாவாரியாக நிலக்கடலை பயிரிட்டுள்ளார். பயிர்களுக்கு 3 முதல் 4 முறை மட்டுமே தண்ணீர் பாய்ச்சியதுடன், 2 முறை மீன் அமிலம் உள்ளிட்ட இயற்கை இடுபொருட்களை பயன்படுத்தியுள்ளார்.

குறைந்த செலவில் மேற்கொண்ட இந்த சாகுபடி முறையில், ஒவ்வொரு செடியிலும் 70 முதல் 100 காய்கள் வரை திரட்சியாகவும் தரமாகவும் விளைந்துள்ளன.

இதுகுறித்து மத்தூர் பாரம்பரிய இயற்கை விவசாய பெண்கள் உற்பத்தியாளர்கள் நிறுவனம் அமைப்பாளர் கிரிஜா கூறுகையில், இயற்கை விவசாயம் மூலம் நஞ்சில்லா உணவை வழங்குவதுடன், குறைந்தது 500 விவசாயிகளை இயற்கை விவசாயத்திற்கு மாற்றுவதே அமைப்பின் நோக்கம். மீன் அமிலம், பஞ்சகாவ்யா போன்ற இயற்கை இடுபொருட்கள் சாகு படி செலவை குறைக் கின்றன. நிலத்தின் வளத்தை மீட்டெடுக்க ஓராண்டு வரை தேவைப் பட்டாலும், மண் வளம் பெற்ற பின்னர் அதிக மகசூல் பெற முடியும். விவசாயி குமரனின் சாகுபடி முறையை முன்மாதிரியாக கொண்டு மற்ற விவசாயிகளும் இயற்கை விவசாயத்திற்கு மாற வேண்டும் என்றார்.

விவசாயி குமரனின் குறைந்த செலவில் அதிக மகசூல் பெற்ற இயற்கை சாகுபடி முறை, அப்பகுதி விவசாயிகளிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

# பூட்டிக் கிடக்கும் போச்சம்பள்ளி தாலுகா ஆபீஸ் இசேவை மையம்: சான்றிதழ்கள் கிடைக்காமல் மக்கள், விவசாயிகள் கடும் அவதி!

கிருஷ்ணகிரி செப்.26–

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தின் பின்புறம் செயல்பட்டு வரும் அரசு இசேவை மையம், கடந்த இரண்டு மாதங்களாகத் திறக்கப்படாமல் பூட்டிக் கிடக்கிறது. இதனால் ஆன்லைன் மூலம் சான்றிதழ்கள் விண்ணப்பிக்க முடியாமல் பொதுமக்களும் விவசாயிகளும் பெரும் தவிப்பிற்குள்ளாகி உள்ளனர்.





இந்த இசேவை மையத்திற்கு நாள்தோறும் போச்சம்பள்ளி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் தங்களது பல்வேறு ஆன்லைன் விண்ணப்பங்களைப் பதிவு செய்ய வந்து செல்கின்றனர். ஆனால், இரண்டு மாத காலமாக இந்த மையம் ஒரு நாள் கூட திறக்கப்படாததால், அத்தியாவசியத் தேவைகளுக்குச் சான்றிதழ் பெற முடியாமல் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நிலை நீடிக்கிறது. தனியார் ஆன்லைன் மையங்களில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதால், ஏழை எளிய மக்கள் பெரும் பொருளாதாரச் சுமைக்கு ஆளாகியுள்ளனர். எனவே, இந்த இசேவை மையத்தை உடனடியாகத் திறந்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் எனப் பொதுமக்களும் விவசாயிகளும் மாவட்ட நிர்வாகத்திற்கு அவசரக் கோரிக்கை விடுத்துள்ளனர். அரசு இசேவை மையம் பூட்டிக் கிடப்பதால் பள்ளி, கல்லூரி சேர்க்கை மற்றும் வேலைவாய்ப்பிற்குத் தேவையான சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் மற்றும் வாரிசுச் சான்றிதழ்கள். முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், பி.எம். கிசான் (றிவி ரிவீஃணீஸீ) திட்டப் பதிவுகள் மற்றும் பயிர்க்காப்பீடு செய்தல். முதியோர் உதவித்தொகை, விதவை நிதியுதவி, புதுமைப் பெண் திட்டம் மற்றும் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டங்களுக்கான விண்ணப்பங்கள். புதிய ரேஷன் கார்டு விண்ணப்பித்தல், பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் முகவரி திருத்தங்கள். இந்த அரசு இசேவை மையம் முறையாகச் செயல்படும் போது பொதுமக்களுக்குப் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. தனியார் கணினி மையங்களில் விண்ணப்பிக்க வசூலிக்கப்படும் கூடுதல் கட்டணங்கள் இன்றி, அரசு நிர்ணயித்த மிகக் குறைந்த கட்டணத்திலேயே அனைத்துச் சேவைகளும் மக்களுக்குக் கிடைக்கின்றன. கிராமப்புற மக்கள் தங்களது சான்றிதழ்களுக்காகப் பல இடங்களுக்கு அலைவதைத் தவிர்த்து, ஒரே இடத்தில் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது. ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் நேரடியாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பரிசீலனைக்குச் செல்வதால், இடைத்தரகர்கள் இன்றிச் சான்றிதழ்கள் விரைவாகக் கிடைக்கின்றன.

தற்போது இந்த மையம் தொடர்ந்து மூடப்பட்டுக் கிடப்பதால், அரசு நலத்திட்டங்களின் பயன்களையும், அத்தியாவசியச் சான்றிதழ்களையும் உரிய நேரத்தில் பெற முடியாமல் ஏழை எளிய மக்கள் தவித்து வருகின்றனர். பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, போச்சம்பள்ளி தாலுகா அலுவலக இசேவை மையத்தை விரைந்து திறக்க மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சமூக ஆர்வலர்களும், விவசாயிகளும் வலியுறுத்தியுள்ளனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421, 9750589992